**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

P.W.–1

O.S.No.95/2025

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 09 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி திரு.கே.ஆர். கண்ணன், பி.ஏ., பி.எல்., கூடுதல் சார்பு நீதிபதி, திருப்பூர் அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திருமதி. சசி ரேகா | வயது: 35 |
| த/பெ. : திரு. பிரதீப்குமார் | முகவரி: |
| தொழில் : | |

**முதல் விசாரணை :**

வாதி வங்கி மேலாளர் ஆஜர். பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதி பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். தாவாவில் நான் வாதி வங்கியின் மேலாளர் . முதல் விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். அதை ஏற்றுக் கொண்டு நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை என் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | |
|---|---|---|
| 30.08.2013 – பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு கொடுத்த கடன் விண்ணப்பம் | அசல் | **வா.சா.ஆ 1** |
| 13.05.2014 – கடன் அனுமதித்தற்கான கடிதம் | அசல் | **வா.சா.ஆ 2** |
| 13.05.2014 – பிரதிவாதி வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த கடன் ஒப்பந்தம் | அசல் | **வா.சா.ஆ 3** |
| 13.05.2014 – பிரதிவாதி வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த கடன் ஏற்கொண்டதற்கான கடிதம் | அசல் | **வா.சா.ஆ 4** |
| 28.12.2020 – முதல் பிரதிவாதி கடனை ஒப்புக்கொண்டு எழுதிக்கொடுத்த கடிதம் | அசல் | **வா.சா.ஆ 5** |
| 31.12.2022 – பிரதிவாதிகள் கடனை ஒப்புக்கொண்டு எழுதிக்கொடுத்த கடிதம் | அசல் | **வா.சா.ஆ 6** |

| | | |
|---|---|---|
| 04.01.2025 – 01.01.2014 முதல் 01.01.2025 வரை உள்ள முதல் பிரதிவாதியின் வங்கி கணக்கு பரிமாற்ற விவரங்கள் | கணினி நகல் | **வா.சா.ஆ 7** |

ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆகவே எனது தரப்பு சான்று ஆவணங்களை ஏற்று வழக்குப்படி உத்தரவு ஆக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை**

பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

ஒம்/–கே.ஆர்.கண்ணன்
கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.